**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 129/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **பழனிவேல்** |
| Father's / Husband Name | : | **செல்லசாமி** |
| Address | : | **லாடபுரம்** |
| Age | : | 52/2025 |

**தேதி : 01.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக TN 46 T 8732 என்ற Splender இருசக்கர வாகனம் உள்ளது. நானும், எனது மனைவியும் லோன் வாங்குவதற்காக பெரம்பலூர் கிருஷ்ணா தியேட்டர் எதிர்புறம் உள்ள HDFC வங்கிக்கு கடந்த 18.06.2024 தேதி அன்று மதியம் 2.30 மணிக்கு சென்று வாகனத்தை மேற்படி வங்கிக்கு எதிர்புறம் நிறுத்திவிட்டு வங்கிக்கு சென்றுவிட்டு ஒரு அரை மணி நேரம் கழித்து வந்து பார்த்தபோது என்னுடைய இருசக்கர வாகனத்தை காணவில்லை. அதன்பிறகு நான் பெரம்பலூர்முழுவதும் தேடிபார்த்தேன் கிடைக்கவில்லை, மற்ற இடங்களிலும் தேடிபார்த்தேன் கிடைக்காததால் 09.07.2024 அன்று பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதன்பிறகு 29.07.2024 அன்று காணாமல்போன என்னுடைய இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக உதவி ஆய்வாளர் போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார். நான் பெரம்பலூர் காவல் நிலையத்திற்கு சென்று என்னுடைய இருசக்கர வாகனத்தை பார்த்தேன். அதன்பிறகு நீதிமன்றத்தின் மூலம் மனு செய்து என்னுடைய இருசுக்கர வாகனத்தை நான் இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் என்னுடையதுதான். **புகைபடம் அ.சா.ஆ– 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இருசக்கர வாகனம் காணாமல்போனது 18.06.2024ம் தேதி என்றால் சரிதான். புகாரை நான் 09.07.2024ம் தேதி கொடுத்தேன் என்றால் சரிதான். என்னுடைய இருசக்கர வாகனம் காணாமல் போன அன்றே நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றேன். போலீஸார் என்னை தேடிபார்த்துவிட்டு வந்து புகார் கொடுக்க சொன்னார்கள். அதனால் காலதாமதமாக புகார் கொடுத்தேன். இந்த விவரத்தை என்னுடைய போலீஸார் விசாரணையிலும், புகார் மனுவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய இருசக்கர வாகனத்தை யார் எடுத்துசென்றார்கள் என்று அருகில் இருந்தவர்கள் யாரும் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். பெரம்பலூரில் உள்ள HDFC வங்கி அருகில் சி.சி.டி.வி. கேமரா உள்ளது என்று சொன்னால் சரிதான். வங்கிக்கு அருகில் உள்ள கடைகளில் கண்காணிப்பு கேமரா இருந்தது.

போலீஸார் சி.சி.டி.வி கண்காணிப்பு கேமராவை வந்து பார்வையிட்டார்கள். ஆனால் கண்காணிப்பு கேமராவை தள்ளி இருசக்கர வாகனத்தை நான்

நிறுத்தியிருந்ததால் அதில் பதிவு ஆகவில்லை என்று போலீஸார் சொன்னார்கள்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.